Singapore Personal Access
SingPass

# இந்த இரட்டைக் கடவுச்சொல் முறைகளில் (2FA) ஏதேனும் ஒன்றுக்கு இப்போதே மாறவும்

*(go.gov.sg/singpass-2fa-methods)*

## 1. என்னிடம் திறன்பேசி இருக்கிறது




**சிங்பாஸ் செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்பாட்டுக்காக அமைத்துக் கொள்ளவும்**

| *ஐஓஎஸ் (iOS) பயன்படுத்துவோருக்காக:* | *ஆண்ட்ராய்ட் (Android) பயன்படுத்துவோருக்காக:* |
| --- | --- |
| ***https://go.gov.sg/spm-app-store*** | ***https://go.gov.sg/spm-play-store*** |

இதில், நீங்கள் உங்கள் கைரேகை, முக அடையாளம் அல்லது 6-இலக்க கடவுக்குறியீட்டைப் பயன்படுத்தி மின்னிலக்கச் சேவைத்தளங்களுக்குள் நுழையலாம்.

சிங்பாஸ் செயலியைப் பயன்பாட்டுக்காக அமைக்கும் வழிமுறைகளை அறிய செல்லவேண்டிய இணையமுகவரி go.gov.sg/singpass-2FA-guides.

## 2. என்னிடம் செயலிகளைப் பதிவிறக்கம் செய்யமுடியாத கைப்பேசி இருக்கிறது




**உங்கள் குறுஞ்செய்தி 2FA முறையை www.singpass.gov.sg வழி பயன்பாட்டுக்காக அமைத்துக் கொள்ளவும்**

இதில், உங்கள் கைத்தொலைபேசி எண்ணுக்கு அனுப்பப்படும் குறுஞ்செய்தி ஒருமுறை-கடவுச்சொல்லைப் பயன்படுத்தி சிங்பாஸ்ஸுக்குள் நுழையலாம்.

குறுஞ்செய்தி 2FA முறையை பயன்பாட்டுக்காக அமைக்கும் வழிமுறைகளை அறிய செல்லவேண்டிய இணையமுகவரி go.gov.sg/singpass-2FA-guides.

*இச்சேவை உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண்களுக்காக மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

Singapore Personal Access SingPass

### 3. என்னிடம் வலை கேமரா உள்ள கணினி இருக்கிறது



**முக அடையாளத்தைச் சரிபார்த்தல்**

உங்கள் சிங்பாஸ் அடையாளத்தையும் கடவுச்சொல்லையும் கொண்டு மின்னிலக்கச் சேவைக்குள் நுழைந்துவிட்டு, பின்னர் உங்கள் முகத்தை வலை நிழலி (வலை கேமரா) உள்ள கணினியில் அல்லது முன்பக்க கேமரா உள்ள திறன்பேசியில் வருடவும் (ஸ்கேன் செய்யவும்).

அல்லது, மத்திய சேமநிதி சேவை நிலையங்கள், சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தின் (ஐராஸ்) வருமானவரி செலுத்துவோர் மற்றும் வர்த்தக சேவைகள் நிலையம், நமது தெம்பனீஸ் நடுவத்தின் (நமது தெம்பனீஸ் ஹப்) பொதுச் சேவை நிலையம், கேலாங் ஈஸ்ட் பொது நூலகம், அஷூரிட்டி (Assurity) வாடிக்கையாளர் சேவை நிலையம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள முக அடையாளத்தைச் சரிபார்த்தல் கூடாரங்களைப் பயன்படுத்தலாம்.

### 4. இணையப் பரிவர்த்தனை செய்ய எனக்கு உதவி தேவை



**பல-பயனர் குறுஞ்செய்தி 2FA**

பரிவர்த்தனைகளைச் செய்ய உங்கள் குடும்ப உறுப்பினர் உங்களுக்கு உதவினால், குறுஞ்செய்தி வழி ஒருமுறை-கடவுச்சொல்லைப் பெறுவதற்கு, உங்கள் சிங்பாஸ் கணக்கை அவருடைய தொலைபேசி எண்ணுடன் இணைக்கலாம். அதற்கு ஒரே முறை வெளிப்படையான அனுமதி வழங்கவேண்டும்.

இந்தத் தெரிவைச் செயல்படுத்த, தீவு எங்குமுள்ள ஏதேனும் சிங்பாஸ் முகப்புக்கு இரு தரப்பினரும் நேரடியாக செல்லவேண்டும் (முகப்புகள் உள்ள இடங்களை go.gov.sg/singpass-counters இணையப்பக்கத்தில் காணலாம்). நேரடியாக செல்வதில் சிரமம் ஏதேனும் இருந்தால், தயவுசெய்து எங்கள் சிங்பாஸ் உதவிச்சேவையைப் பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளவும்: +65 6643 0555 / support@singpass.gov.sg.

நீங்கள் நேரடியாக பரிவர்த்தனைகளைச் செய்ய விரும்பினால், தயவுசெய்து உங்கள் அடையாள அட்டை அல்லது வெளிநாட்டவர் அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு சம்மந்தப்பட்ட அரசாங்க அமைப்பின் அலுவலகத்துக்குச் செல்லவும்.

நீங்கள் 60 வயது அல்லது அதற்கும் மேற்பட்டவராகவும் இருந்து, சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் காம்கேர் (ComCare) உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தால் அல்லது வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகைத் திட்டத்தில் சேர்ந்திருந்தால், மூத்தோருக்கு கைத்தொலைபேசி திட்டத்தின் கீழ் திறன்பேசியையும் கைபேசித் திட்டத்தைப் பெறுவதற்கு நீங்கள் தகுதிபெறலாம். உதவிக்கு விண்ணப்பிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக மன்றங்கள்/நிலையங்களிலும் பொது நூலகங்களிலும் உள்ள எஸ்ஜி மின்னிலக்க (SG Digital) சமூக மையங்களை அணுகலாம். மேல்விவரங்களுக்கு: https://www.imda.gov.sg/ma

*சிங்பாஸ் தொடர்பான பயன்பாட்டு விதிமுறைகள் மற்றும் தனியுரிமை அறிக்கை குறித்த விவரங்களை singpass.gov.sg இணையத்தளத்தில் காணவும்.*